## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி
## ஏழாம் பத்து

### ஐந்தாம் திருமொழி - தந்தை காலில்
### திருவழுந்தூர் 1
### [தலைவனைப் புணர்ந்து பிரிந்த தலைவி தனது பாங்கியர்க்குத் தலைவன் பதி உரைத்த பாசுரம்]

** தந்தை காலில் பெருவிலங்கு * தாள் அவிழ * நள்ளிருட்கண்
வந்த எந்தை பெருமானார் * மருவி நின்ற ஊர் போலும் **
முந்தி வானம் மழை பொழிய * மூவா உருவின் மறையாளர் *
அந்தி மூன்றும் அனல் ஓம்பும் * அணியார் வீதி அழுந்தூரே 1

பாரித்து எழுந்த * படை மன்னர் தம்மை மாள * பாரதத்துத்
தேரில் பாகனாய் ஊர்ந்த * தேவ தேவன் ஊர் போலும் **
நீரில் பணைத்த நெடுவாளைக்கு * அஞ்சிப் போன குருகினங்கள் *
ஆரல் கவுளோடு அருகணையும் * அணியார் வயல் சூழ் அழுந்தூரே 2

செம்பொன் மதிள் சூழ் தென்னிலங்கைக்கு இறைவன் * சிரங்கள் ஐயிரண்டும் *
உம்பர் வாளிக்கு இலக்காக * உதிர்த்த உரவோன் ஊர் போலும் **
கொம்பில் ஆர்ந்த மாதவி மேல் * கோதி மேய்ந்த வண்டினங்கள் *
அம்பராவும் கண்மடவார் * ஐம்பால் அணையும் அழுந்தூரே 3

வெள்ளத்துள் ஓர் ஆலிலை மேல் * மேவி அடியேன் மனம் புகுந்து * என்
உள்ளத்துள்ளும் கண்ணுள்ளும் * நின்றார் நின்ற ஊர் போலும் **
புள்ளுப் பிள்ளைக்கு இரை தேடிப் * போன காதல் பெடையோடும் *
அள்ளல் செறுவில் கயல் நாடும் * அணியார் வயல் சூழ் அழுந்தூரே 4

பகலும் இரவும் தானேயாய்ப் * பாரும் விண்ணும் தானேயாய் *
நிகரில் சுடராய் இருளாகி * நின்றார் நின்ற ஊர் போலும் **
துகிலின் கொடியும் தேர்த் துகளும் * துன்னி மாதர் கூந்தல் வாய் *
அகிலின் புகையால் முகில் ஏய்க்கும் * அணியார் வீதி அழுந்தூரே 5

ஏடிலங்கு தாமரை போல் * செவ்வாய் முறுவல் செய்தருளி *
மாடு வந்து என் மனம் புகுந்து * நின்றார் நின்ற ஊர் போலும் **
நீடு மாடத் தனிச் சூலம் * போழக் கொண்டல் துளி தூவ *
ஆடல் அரவத்து ஆர்ப்பு ஓவா * அணியார் வீதி அழுந்தூரே 6

மாலைப் புகுந்து மலர் அணை மேல் வைகி * அடியேன் மனம் புகுந்து * என்
நீலக் கண்கள் பனி மல்க * நின்றார் நின்ற ஊர் போலும் **
வேலைக் கடல் போல் நெடு வீதி * விண் தோய் சுதை வெண்மணி மாடத்து *
ஆலைப் புகையால் அழல் கதிரை மறைக்கும் * வீதி அழுந்தூரே 7

வஞ்சி மருங்குல் இடை நோவ * மணந்து நின்ற கனவகத்து * என்
நெஞ்சு நிறையக் கை கூப்பி * நின்றார் நின்ற ஊர் போலும் **
பஞ்சி அன்ன மெல்லடி * நற்பாவைமார்கள் * ஆடகத்தின்
அஞ்சிலம்பின் ஆர்ப்பு ஓவா * அணியார் வீதி அழுந்தூரே 8

என் ஐம்புலனும் எழிலும் கொண்டு * இங்கே நெருநல் எழுந்தருளி *
பொன் அங்கலைகள் மெலிவு எய்தப் * போன புனிதர் ஊர் போலும் **
மன்னு முதுநீர் அரவிந்த மலர் மேல் * வரிவண்டு இசை பாட *
அன்னம் பெடையோடு உடன் ஆடும் * அணியார் வயல் சூழ் அழுந்தூரே 9

** நெல்லில் குவளை கண் காட்ட * நீரில் குமுதம் வாய் காட்ட *
அல்லிக் கமலம் முகம் காட்டும் * கழனி அழுந்தூர் நின்றானை **
வல்லிப் பொதும்பில் குயில் கூவும் * மங்கை வேந்தன் பரகாலன் *
சொல்லில் பொலிந்த தமிழ் மாலை * சொல்லப் பாவம் நில்லாவே 10

**அடிவரவு:** தந்தை பாரித்து செம்பொன் வெள்ளத்துள் பகல் ஏடு மாலை வஞ்சி
என்னைம்புலனும் நெல்லில் சிங்கம்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**